©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 169] CHENNAI, TUESDAY, JUNE 7, 2011
Vaikasi 24, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ4/516/2010.)*

**No. VI(2)/330(c-1)/2011.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியின் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. A. ரெத்தினம் என்பவர், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், அத்தியாயம் 5, சட்டப்பிரிவு 84, உட்பிரிவு (C)–ன்படி ஊராட்சி கணக்குகளை முறையாக பராமரிக்காததாலும், அத்தியாயம் 3, சட்டப்பிரிவு 46–ன்படி ஊராட்சி மன்றத் தலைவருக்குள்ள கடமைகளை செய்யத் தவறியதாலும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205, உட்பிரிவு (II)-ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. A. ரெத்தினம் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி அறிவிக்கை வெளியிடப்படும் நாள் முதல் வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் பதவி நீக்கம் உறுதி செய்யப்படுகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், தீராம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ8/2160/2009.)*

**No. VI(2)/330(c-2)/2011.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தீராம்பாளையம் ஊராட்சியின் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. A. முருகேசன் என்பவர், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், அத்தியாயம் 5, சட்டப்பிரிவு 84, உட்பிரிவு (C)–ன்படி ஊராட்சி கணக்குகளை முறையாக பராமரிக்காததாலும், அத்தியாயம் 3, சட்டப்பிரிவு 46–ன்படி ஊராட்சி மன்றத் தலைவருக்குள்ள கடமைகளை செய்யத் தவறியதாலும் அரசாணையினை மீறி 23287 சதுர அடிக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்கி அதனால் கட்டிடம் இடிந்து விழுந்து 4 பேர் உயிர் இழப்பு ஏற்பட காரணமாய் இருந்துள்ளதாலும் முறையற்ற கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டதாலும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205, உட்பிரிவு (II)-ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய தீராம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. A. முருகேசன் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி அறிவிக்கை வெளியிடப்படும் நாள் முதல் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய தீராம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவரின் பதவி நீக்கம் உறுதி செய்யப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி,
2011 ஜூன் 2.

**கா. பேச்சியம்மாள்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.